தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-8-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## விவசாயிகளுக்கு நீடித்த நவீன கரும்பு சாகுபடித் தொழில் நுட்பத்தில் பயிற்சி

இன்றைய சூழலில் அதி நவீன தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெறுதல் விவசாயிகளுக்கு அத்தியாவசியமாகின்றது என்பதை மனதில் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகதின் கீழ் இயங்கி வரும் பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தேசீய வேளாண் முன்னேற்றத் திட்டம் மூலமாக ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த கிட்டத்தட்ட சுமார் 430 கரும்பு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தது.

வேளாண் பெருமக்கள் முதல்நிலை அனுபவப் பயிற்சியில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் அனைத்தையும் சிறப்பரை மூலமும், பட்டறிவு மூலமும் கற்றுக் கொண்டார்கள். இப்பயிற்சி ஏறத்தாழ 1½ மாத காலம் அதாவது சூன் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டு, ஆகஸ்ட் முதல் வாரத்தில் நிறைவுபெற்றது. பதினான்கு வட்டத்தில் உள்ள வெவ்வேறு பகுதியைச் சார்ந்த விவசாயிகளின் ஆர்வம் கண்டு, 17 குழுக்களாக பிரிக்கப்பட்டு பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

இப்பயிற்சியின் நோக்கம் பயிற்சி விவசாயிகள் மட்டுமல்லாது, மற்ற விவசாயிகளும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உருவாக்கும் தொழில் நுட்பத்தை நன்கு கற்று பயன்பெற வேண்டும். என்பதாகும். தேசிய வேளாண் முன்னேற்றத் திட்டத்தில் கிட்டத்தட்ட 3.25 லட்சம் வழங்கப்பட்ட நிதியுதவியுடன் இந்த பயிற்சி நடத்தப்பட்டது. அதற்கேற்ப விரிவாக்கக் கல்வி இயக்கத்தின் கீழ் உள்ள பல்வேறு வேளாண் அறிவியல் நிலையங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு அருகாமையில் உள்ள பல்வேறு கரும்பு விவசாயிகளை வேளாண்துறை திட்டமிட்டு, பயிற்சித் திட்டத்தின அட்டவணையைத் தயாரித்து, பயிற்சி விவசாயிகள், பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் துவக்கவிழா, ஜீன் மாதம் 25ந் தேதி காலை 10 மணியளவில் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ம.மகேஸ்வரன் மற்றும் முனைவர் ச.பாஸ்கரன், தனி அலுவலர் (விதைகள்) அவர்களால் துவக்கப்பட்டது.

சத்தியமங்கலம், தாளவாடி, தூக்கநாயக்கன்பாளையம், பவானிசாகர், சென்னிலை, நம்பியூர், அம்மாபேட்டை, அந்தியூர், பவானி, பெருந்துறை, மொடக்குறிச்சி, ஈரோடு மற்றும் கொடுமுடி வட்டார விவசாயிகள் பங்கேற்று பயன் பெற்றனர். இத்திட்டத்தின் மூலம், இக்ரிஸாட் எனப்படும் அகில உலக மானாவாரி ஆராய்ச்சி நிலையம், ஐதராபாத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட, தமிழ்நாட்டின் சீதோஷ்ன நிலைக்கும், தட்பவெப்ப நிலைக்கும், ஆதாரங்களுக்கும் ஏற்றவாறு சிறு மாற்றம் செய்யப்பட்டு கரும்பு விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படுகின்றது.

நீடித்த நிலைத்த கரும்பு சாகுபடியில் பரிந்துரைக்கப்பட்ட தொழில் நுட்பத்தில், குறிப்பாக, புரோடிரே முறையில் நாற்றாங்கால் தயாரிக்கப்பட்டு, பல்வேறு விவசாயிகளுக்கு, முன்னோடி விவசாயிகளே வழங்கி வருகின்றார்கள். வெள்ளோட்டை சார்ந்த விவசாயி கிட்டத்தட்ட 14 லட்சம் கரும்பு நாற்றுக்களை சக விவசாயிகளுக்கும், அருகாமை கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கும் வழங்கி வருகின்றார். இதேபோல், சொட்டு நீர்ப்பாசன முறையிலும் கரும்பு பயிர் வளர்க்கப்பட்டு கிட்டத்தட்ட ஏக்கருக்கு 62 டன் என்று கிடைக்கப்பெறுகின்றார்கள்.

ஒரு மாத காலத்திற்கும் மேலாக நடைபெற்ற இப்பயிற்சியின் நிறைவுவிழா, 05.08.2015 அன்று வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகரில் நடைபெற்றது.

முன்னதாக முனைவர் வெ.கி.துரைசாமி, பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர் அவர்கள் வரவேற்று பேசினார். அவர் கரும்பு விவசாயிகள் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பத்தை செவ்வனே கடைபிடித்து, குறிப்பிட தக்க மாற்றத்தை மகசூலில் பெற, விவசாயிகளைக் கேட்டுக்கொண்டார். முனைவர் ப.கருப்புசாமி, பேராசிரியர் (பூச்சியியல் துறை), முனைவர் ம.மருதாசலம், உதவிப் பேராசிரியர் (நோயியல் துறை), முனைவர் ஷீலாவேணுகோபால், உதவிப் பேராசிரியர் (பூச்சியியல் துறை) மற்றும் முனைவர் ம.மணிகண்டன், உதவிப் பேராசிரியர் (வேளாண் பொறியியல் துறை) ஆகியோர் அவரவர்களின் தொழில்நுட்பத்தின் சிறப்பை வலியுறுத்தி உரையாற்றினார்கள்.

இத்திட்டத்தின் பலனாக, கரும்பு விவசாயிகள் விளைச்சல் திறனை இருமடங்காக்கி, மகசூலை மும்மடங்காக்க முடியும் என்று நம்பினார்கள். மேலும் பல்வேறு பட்டறிவில் மூலம் பலதரப்பட்ட விவசாயிகள், தாங்களும் தொழில்நுட்பத்தின் வெற்றி கண்டு, முன்னேற அறுதியிட்டு கூறினார்கள்.

முனைவர் ஜெ.வெங்கட்பிரபு, பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்) இப்பயிற்சி திட்டத்துக்கு ஒருங்கினைப்பாளராக இருந்து பயிற்சியை நடத்தினார். முனைவர் செ.க.நடராஜன், உதவிப் பேராசிரியர் (உழவியல் துறை) பயிற்சி வகுப்புகளை நடத்தியதோடு, திட்ட செயலாளராகவும் இருந்து, பயிற்சி சிறப்பாக நடைபெற உதவினார். திரு. ச.விஸ்வநாதன், வேளாண்மை இணை இயக்குநர் (பொருப்பு), ஈரோடு மாவட்டம் அவர்கள் அனைத்துவித ஒத்துழைப்பையும் அளித்து, பயிற்சி விவசாயிகள் பெரிதளவும் கலந்து கொள்ள வலியுறுத்தினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்